

**eduresourceza.com**

Downloaded from eduresourceza.com

NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2018

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 6 pages. Please check that your paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

eduresourceza.com

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

SECTION A

QUESTION 1 பகுதி ஒன்று

ஐந்து தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

1.1 எனக்குப் பிடிக்கும் விலங்குகள்

1.2 கடற்கரையில் ஒரு மறக்கமுடியாத நாள்

1.3 சில தலை சிறந்த தமிழ் நூல்கள்

1.4 என் குடும்பம் மிகவும் பெரியது

1.5 நமது நாடு

**30 marks**

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

**SECTION B**

**QUESTION 2** பகுதி இரண்டு

ஏதேனும் மூன்று கேள்விகளைப் பற்றி எழுதுக
(Choose any 3 from the 4 questions given.)

2.1 புதிதாகக் கிடைத்த உன் செல்லப்பிராணியைப் பற்றி (pet) உன் தோழனுக்கு/தோழிக்குக் கடிதம் எழுதுக (10)

2.2 SMS: வரிசையாக எழுதுக:

அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லை
என்னிடம் சில நாட்கள் தங்கு
வணக்கம், நலமா?
நன்றி வணக்கம்
நான் தனியாக இருக்கிறேன் (10)

2.3 புதிதாகத் திறக்கப்படும் பூக்கடையில் (flower shop) வேலை செய்ய விரும்புகிறாய். இக்கடைக்கு விளம்பரம் (advert) ஒன்று தயாரித்துக் கொள்ளவும். பூக்கடையில் விற்கப்படும் ஐந்து பூக்களின் பெயர்களையும் விளம்பரத்தில் எழுதுக. (10)

2.4 சுருக்கி எழுதுக (சுமார் 12–15 சொற்கள்)

*ஒரு நாள் பொன்மணி ஆகாயத்தில் வெகு வேகமாய்ப் பறந்து கொண்டிருந்தது. அதன் இறகுகளில் சூரியனின் ஒளிக் கதிர்கள் பட்டுத் தங்கம் போல பிரகாசித்தது. இன்னும் மேலே மேலே பறக்க ஆசை கொண்டது. திடீரென்று வெப்பம் தாக்க, "காப்பாற்று காப்பாற்று" எனக் கதறியது. பறக்கும் சுவாரசியத்தில் அதன் இறகுகள், மூங்கில் கிளைகள் உரசித் தீப்பற்றி எரியத் துவங்கியது. பொன் நிறமான அதன் சிறகுகள் எரிந்து கருப்பாக மாறிவிட்டன. அலறிக் கொண்டும் அழுதுக் கொண்டும், வலியால் துடித்துடித்துக் கீழே விழுந்தது. ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையில் சிக்கிக்கொண்டது.*

[*பேராசிரியர் முனைவர் மு.பொன்னவைகோ*] (10)

**30 marks**

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

**SECTION C**

**QUESTION 3** பகுதி மூன்று

3.1 கீழ்வரும் பகுதியைப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:

ஆசிரியர் ஆய்வாளரைப் பார்த்து, "என் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அறங் கூறுதல் உண்மை பேசுதல் முதலிய நற்குணங்களுடையவர்கள் தாம். இவர்களிடம் இருக்கும் ஒரெ ஒரு தீக்குணம் என்ன வென்றால் ஒருவர் மற்றொருவரைக் காணாத விடத்திலே நன்றாக இகழ்ந்து பேசுவார்கள். இந்தத் தீக்குணம் தான் இவர்களுக்கோர் இழிந்த செயலாக இருக்கிறது. அதோ மூலையில் ஒரு பையன் இருக்கிறானே; அவனுடைய பெயர் சின்னப்பன். அவன் நற்செய்கைகளைப் பற்றி வாயினாற் கூடப் பேசமாட்டான். செய்கிற குறும்புகளுக்கோ கணக்குவழக்கு இல்லை. ஒரு நாள் என்னுடைய நாற்காலியில் குண்டூசிகளைக் குத்திவைத்துவிட்டான். நான் வந்து நாற்காலியில் அமர்ந்ததும் குண்டூசிகள் சுருக்கென்று குத்தின.

[*திருக்குறள் விளக்கக் கதைகள்*
*ஆசிரியர்: திரு க இனியன்*]

3.1.1 மூன்று (3) வகைப் பெயர்ச்சொற்களை எழுதுக (3)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு (4) பெயர்ச்சொற்களைத் தருக (4)

3.1.3 வினைச்சொல் என்றால் என்ன? (1)

3.1.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்களை எழுதுக (2)

3.2 ஒருமைக்குப் பன்மை எழுதுக:
எ.கா: பருந்து - பருந்துகள்

3.2.1 ஆசிரியர் (1)

3.2.2 மாணவர் (1)

3.2.3 அவன் (1)

3.2.4 நான் (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

3.3 எதிர்ச்சொற்கள் எழுதுக:
எ.கா: பகல் - இரவு

3.3.1 அந்த (1)

3.3.2 பகைவன் (1)

3.3.3 பெரிய (1)

3.3.4 சில (1)

3.4 ஆண்பாலுக்கு பெண்பால் தருக:

3.4.1 செல்வன் (1)

3.4.2 மாணவன் (1)

3.4.3 அவன் (1)

3.4.4 இளவரசன் (1)

3.5 சேர்த்து எழுதுக:

3.5.1 அந்த + பெண் (1)

3.5.2 இந்த + செடி (1)

3.5.3 அவளை + கண்டாள் (1)

3.5.4 வாழை + பழம் (1)

3.6 பிரித்து எழுதுக:

3.6.1 பன்றிக்குட்டி (1)

3.6.2 அதைக்கண்டார் (1)

3.6.3 இவளைப்பார் (1)

3.6.4 பச்சைக்கொடி (1)

eduresourceza.com

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

3.7 சரியாக எழுதுக:

3.7.1 அம்மா <u>வீடு</u> வந்தார் (1)

3.7.2 சிறுவன் <u>நாய்</u> அடித்தான் (1)

3.7.3 அண்ணன் <u>எலி</u> பிடித்தான் (1)

3.7.4 ஆசிரியர் <u>நூல்</u> படித்தார் (1)

3.8 பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக
(Choose the correct word from the brackets)

3.8.1 அவள் பலா ______________ வாங்கினாள் (பலம், பழம்) (1)

3.8.2 யானைக்குச் சிறிய ______________ இருக்கிறது.
(வால், வாள்) (1)

3.8.3 ______________ ஒரு காட்டு விலங்கு (புலி, புளி) (1)

3.9 <u>இறந்த காலத்தில்</u> எழுதுக
எ.கா: அவன் வா - அவன் வந்தான்.

3.9.1 அவள் வீட்டுக்கு <u>போ</u> (1)

3.9.2 சிருவன் கடைக்கு <u>ஓடு</u> (1)

3.10 கீழ்வரும் நான்கு சொற்களில் எந்தச் சொல் பொருத்தமான தல்ல?
ஆடு மான் காடு மாடு (1)

**40 marks**

**Total: 100 marks**

Downloaded from eduresourceza.com